# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௩] யாழ்ப்பாணம்:- கர வருஷ மார்கழி மீ ௬ உ வெள்ளிக்கிழமை (21 டிசம்பர் 1951) [இல - ௭௩]

# விஞ்ஞானியின் கனவே சித்தாந்தியின் சித்தம்

## இயற்கைக் கலைஞானத்தின் எல்லையற்ற விரிவு

'மனிதனை மனிதனாக நடத்த வல்லது எது? அது ஒன்றே ஒன்று; அதுவே தத்துவ ஞானம்''

மனிதன் பிரபஞ்சத்தைப் பற்றித் தான் கொள்ளும் கொள்கையினால், அதாவது, தன்னுடைய வாழ்க்கையின் தத்துவ அறிவினால் தன் வாழ்க்கையை நடத்துகிறான். தத்துவஞானத்தைப் பற்றிய பெரும்பான்மையான அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் நாடி போன்றது. எதைப்போல எனில் ஒரு உயிர்ச்சத்துக்கு எப்படி உணவு, சாறு, நீர் என்ற மூவகை ஆதாரச் சத்துக்கள் வேண்டுமோ அதைப் போலவே மனித வாழ்க்கைக்கும் அவ்வறிவு இன்றியமையாதது என்க.

ஏனெனில் ஒருவனுடைய வாழ்க்கைக்கு உயிர்ச் சூத்திரம் போன்றது தத்துவ ஞானம் ஆகும். தனிப்பட்ட ஒரு ஆள் அல்லது ஒரு இனம் என்பவைகளின் வளர்ச்சியை உறுதியாக்குவது நம்பிக்கையே ஆகும். அவ் வளர்ச்சியானது பொதுமக்கள் உற்றிருக்கும் அறிவு முதிர்ச்சியைப் பொறுத்திருக்கின்றது. அறியாமையைத் தொலைக்காவிட்டால் மக்கள் இருட்டில் திண்டாடும் குருடர்களைப்போல் இருப்பார்கள். அப்போது அவர்கள் விருப்பு வெறுப்பு என்ற அலைகளால் மோதப்பட்டுப் பிறரால் வஞ்சிக்கப்பட்டுத் துன்புறுவார்கள். அப்போது ஒவ்வொரு சீர்திருத்தமும் அறியாமை என்னும் பாறையின் மீது மோதிக்கொண்டு அழியும்.

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனும் சமூகப் பொறுப்புணர்ச்சி பெறும்படி எழுப்பப்படி வேண்டும். ஒவ்வொருவனும் அவனுடைய சுவையில் ஒரு பங்கு ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்தக் கொள்கையோ நம்பிக்கையோ குறிப்பிடத் தக்கதாய் ஆகுமாயின் குணத்தையோ நடத்தையையோ செவ்வைப்படுத்துவதா யிருக்க வேண்டும்.

### தமிழர்தம் பண்பு

தமிழர்களின் பெருமை யாதெனில் தொன்று தொட்டு அவர்களிடையே அன்றுட வாழ்க்கையைப் பண்படுத்தக்கூடியதும் அவர்களுடைய குணம் நடத்தை இவைகளைச் செவ்வைப்படுத்தக் கூடியதும் ஆன ஒரு நம்பிக்கை, தத்துவஞானம் கொண்டதே ஆகும். இந்தத் தத்துவ ஞானமோ, தமிழ் மக்கள் ஒப்பற்ற ஞானிகளில் தோன்றுவித்த சித்தாந்த ஞானமாகும். சித்தாந்தம் என்றால் உண்மையான முடிவு என்று பொருள். அது தோல்விக் கொள்கைக்கு எதிரிடையாக நிரூபித்துக்கொண்டது. உண்மையான முடிவு மட்டுமல்ல, உண்மை ஒன்றுமட்டுமே அது கொண்டது. அது சிறப்பாகச் சைவ ஆகமங்களை அடிப்படையாகக்கொண்டது. என்றாலும் வேதங்களையும் (மறைகள்) அது ஏற்கும். ஆகவே தமிழ் ஆசிரியர்களிடம் அது சைவாத்துவிதம் என்று பாராட்டப்படுகின்றது.

சித்தாந்தம் தமிழ் நாட்டின் ஆன்மீகத் தத்துவத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. அதனுடைய நோக்கம் மனிதனை நன்றாக வாழக் கற்பிப்பதும் இறைவனையும் உலகையும் தக்க முறையில் அறிந்து எண்ணுவதும் ஆகும். அது தமிழர்களுடைய வாழ்க்கை நெறியும் ஆகும்.

### சித்தாந்தச் சிறப்பு

இனிச் சைவ சித்தாந்தத்தின் உட்கருத்தைக் கூறுவோம். சித்தாந்தம் முப்பொருள் உண்மை

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அரசியல் அலை

# கணம் பித்தம் - - - - கணம் வாதம்!

## இந்து ஆலயச் சட்டத்திற்கு முந்தி முயற்சித்தவர் யார்?

### திரு. C. சுந்தரலிங்கத்துக்கு மந்திரியின் மறுப்பு

அந்தரங்க இரகசியங்களை ஆராவது எடுத்துச் சொல்லி விட்டால் அந்தரப்படுபவர்கள் நிலை பரிதாபத்துக்குரியதே. இந்து ஆலய பாதுகாப்புச் சட்டத்தைப் பாராளுமன்ற மேற்சபையிற் கொணர்ந்த உள்நாட்டு மந்திரி சில உள் இரகசியங்களைத் தெரிவித்தார். அதற்கு முந்திய நாள் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் "இந்துசமயத்திற் கை வையாதீர்கள்...." என்று திரு. சுந்தரலிங்கத்தின் கர்ச்சனையைக் கண்டித்து உள்நாட்டு மந்திரி முன்னரே கை வைத்தவர் திரு. சுந்தரலிங்கந்தான் என்று வேடிக்கையாகப் பேசி முடித்தார்.

சொற்பெருக்காளர் பேசும்பொழுதெல்லாம் என்ன பேசுகிறார் என்பதை இயற்கையாய் ஒலிபதித்து வைத்துக்கொண்டால் ஏதாவது விஷயத்திற் பேசும்பொழுது தனது முந்திய ஒலிப்பதிவுகளைக் கேட்டுக் கூறியதிலிருந்து மாறுவதாக மனம் வரும்பொழுதெல்லாம் மனமாற்றத்துக்கு ஆதாரத்தைக் காட்டி நிலைமையைச் சமாளித்துவிடலாம்.

சனப்பிரதிநிதிகளின் பேச்சுக்களைப் பொதுமக்கள் அவதானித்து வருவது நல்லது. பேச்சொன்று செய்கை ஒன்று என்ற குற்றம் இயல்பாகவே உள்ளது. ஆனால் 'பேச்சொன்று இன்று, பேச்சு வேறு சில நாட் சென்று' என்ற குற்றமுஞ் சேர்ந்துவிட்டாற் பேசவும் வேண்டுமோ?

### பேசாமடந்தைகளானால்!

சிங்கக் கொடியைச் சிறிது மாற்றித் தமிழர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் புதுக்கப்பெற்ற தேசியக்கொடியின் கீழ் ஒருபோதும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருக்கமாட்டேனென்று மார்புதட்டி வீரங்காட்டிப் பிரதிநிதித்துவத்தை யிழந்து பின்னரும் போட்டியின்றிப் பிரதிநிதியான திரு. சுந்தரலிங்கம் சொற் சோர்வுபடமாட்டார். சுதந்திர வீரராகத் திகழ்வாரென்று தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கக் காதல் முடிந்ததும் ஓடோடியுஞ் சென்று பாராளுமன்றத்தில் உட்கார்ந்தார் திரு. சுந்தரலிங்கம் என்பதை அரசியலபிமானிகள் மறந்திருந்தாலும் இப்பொழுது மறுபடியும் ஞாபகப்படுத்திக்கொள்ளும்படி திரு. சுந்தரலிங்கம் அவர்கள் தூண்டிவிட்டார்.

பிரதிநிதிகள் பேசாமடந்தைகளாயப் பிறந்து பெரும் பயன் அளிக்குமா? என்க! ளோ!!

### பிழைத்தார் பிழைப்பறிய வல்லை ... ... ...

அரும்பித்தசெஞ்ஞாயிறேய்க்கும்மடி
யழகெழுதலா காவருட்சேவடி
சுரும்பித்ர வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங்காலனையுங்காய்ந்தவடி
பெரும்பித்தர்கூடிப்பிதற்றும்மடி
பிழைத்தார்பிழைப்பறிய வல்லவடி
திருந்தார்த்தென்சேடிலகாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி.

### அணுச்சக்தி விமானம்!

அணுச்சக்தியால் ஆகாயவிமானத்தை இயக்க அமெரிக்க ஆகாயப்படையினர் முயலுகின்றனர்.

# இந்து ஆலயச் சட்டம்

## மந்திரியின் அதிகாரத்துக்கு எதிர்ப்பு

### தமிழரசுக் கட்சியின் தீர்மானம்

இந்து ஆலய பரிபாலனச் சட்டத்தின் பொதுவான அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பெற்று அதன் உறுப்புக்கள் திருத்தப்படவேண்டுமென்று திரு. S. J. V. செல்வநாயகம் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விசேஷ அவசிய கூட்டமொன்றில் தலைமை வகித்துப் பேசுகையிற் கூறினார்.

திருத்தப்பட வேண்டிய உறுப்புக்களாவன:—

1. மந்திரியின் அதிகாரம் முழுவதும் நீக்கப்படவேண்டும.

2. நீதாசன அதிகாரியாய (Judilcial Officer) இருக்கும் ஒரு இந்து அல்லது பத்து வருட நீதி முறைப் பயிற்சி உள்ள ஒரு இந்துவே இந்து ஆலயச் சட்ட அதிகாரியாதற் குரியர்.

3. இந்து ஆலயச் சட்டபரிபாலனசபை அங்கத்தவர் விசேஷ இந்துசபைகளால் அல்லது குறித்த சபைகளாலும் இடாப்பில் எழுதப்பட்டு ஒழுங்காகக்கோயில் வழிபாடு செய்வோராலும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இதற்குவேண்டிய ஒழுங்குகள் அமைக்கப்படுதல்வேண்டும்.

4. குறித்த இந்து ஆலயச் சட்ட பரிபாலனச் சபையே இந்து ஆலயங்களையும் அறநிலையங்களையும் மேற்பார்வையிடும் அதிகாரமுடையதா யிருத்தல் வேண்டும்.

5 குறித்த சட்டபரிபாலனத்தில உண்டாகும் பிணக்குகள் மாவட்ட நீதிமன்றத்தால் (District Court) அல்லது அதன் மேல் உயர்நீதிமன்றத்தால் (Supreme Court) விசாரித்துத் தீர்மானிக்கக்கூடிய ஒழுங்குகள் இச்சட்டத்தில் அமைக்கவேண்டும.

# தந்தையின் அடிச்சுவட்டில் மைந்தன்

## மகாத்மா காட்டிய வழியில் மணிலால் காந்தி

### நிறந்திமிர் கொண்ட நீசர்கள்

தென்னாபிரிக்காவில் வெள்ளையரென்றும் வெள்ளையரல்லாதாரென்றும் நிறத் திமிர் கொண்ட மிலேச்சர்கள வெள்ளையருக்குப் பிரத்தியேக வசதிகளை அளிக்கும் ஓர் சட்டத்தை நிறைவேற்றியமையை எதிர்த்துச் சத்தியாக்கிரகஞ் செய்யும் மணிலால் காந்தி தமது போர்ப்படை ஒரு பேர் வீரனையே கொண்டதென்றும் சாதிபேதம் என்னும் விபரீதத்தை அழிப்பதற்குச் சட்டமுறைகளை போதியளவன் றென்றும் காலக்கிரமத்தின் மக்கள் மனப்பான்மை பக்குவமாதலாலேதான் அகன்றவிடுமென்றும் அகில உலகிலும் பரந்த மனப்பான்மை பரவி வருகிறதென்றும் தென்னாபிரிக்காவில் இது அண்மையில் எங்குதான் தீருமென்றுஞ்செல்விச் சட்டமறுப்பியக்கத்தைத் தாம் படிப்படியாக நடத்துவதாகத் தீர்மானித்துள்ளாரென்றுங் கூறினர்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். கர ௵ மார்கழி மீ ௬ ௨ வெள்ளிக்கிழமை

## எடுங்கள் கையை :: :: இந்து சமயத்தார்!

சென்ற வாரம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் இந்து ஆலய பரிபாலன சட்டத் திட்டத்தை எதிர்க்கும்முறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் இந்துசமயத்தில் அரசாங்கம் கைவைக்கப்படாதென்றும் அப்படியானல் இந்துக்கள் அச்செயலைப் பலமாக எதிர்ப்பார்கள் என்றும் வீராவேசத்துடன்பேசியுள்ளார். இந்த சமயத்தில் அல்லது வேறெந்தச் சமயத்தில் இலங்கை அரசாங்கமோ அன்றிப் புறநாட்டரசாங்கங்களோ அதிகார தத்துவத்தைக் காட்டி அடிபணியச் செய்ய முடியாதென்பது ஒரு பேருண்மையாயிருக்கவும், இந்து சமயத்தை இலங்கை அரசாங்கம் தாக்குகின்றது என்று ஆராவது கூறுவாரேயானல் அது வியப்புக்கிடமாகவே இருக்கும். பல்கலைக் கழகப் பேராசிரியராகவிருந்தும் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் மந்திரியாகவும் அருங் கடமைகள் புரிந்தும் அநுபவம் வாய்ந்த திரு. சுந்தரலிங்கம் அவர்கள் இந்துசமயத்தை இலங்கை அரசாங்கம் தாக்குகின்றது என்று அபயக்குரல் போடுவது நகைப்புக்கிடமாகின்றது.

இலங்கைவாசி ஒருவனைப் பண மோசடிக்காக ஒரு புறநாட்டரசாங்கம் குற்றஞ் சாட்டித் தண்டித்தால் அந்த நாடு இலங்கைத் தேசத்தைத் தாக்குகிறதென்று போர்க்கறைகூவுவது போல விருக்கின்றது இந்துசமயத்தவர் ஒருவர் தரும பரிபாலனஞ் செய்யும்பொழுது நெறி தவறி ஒழுகினதற்காக அவரை அரசாங்கம் குற்றஞ்சாட்டித் தண்டிக்க இந்துசமயத்தை அரசாங்கம் தாக்குகின்றதென்று பரபரத்துப் பழுதையைப் பாம்பென்று பயந்து தடிகொண்டடித் தாங்கு கண்டனஞ் செய்வது.

இந்துசமயத்தைத் தாக்குபவர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கவில்லை அவர்கள் தாம் யாரோ எனின், இந்துசமயிகளாகப் பிறந்தும் இந்து சமயப்பெற்றோரால் வளர்க்கப்பட்டும் இந்து வாழ்க்கை நடத்துகின்றோம் என்று வேடம் போட்டுக் கொண்டு இந்து சமயக்கொள்கைகளுக்கு முற்றிலும் மாறான கொலை களவு கள் காமம் குருநிந்தை என்ற ஐம்பெரும் ஆகாச் செயலகளைச் செய்தும் திருநீறும் திருவைந்தெழுத்தும் ஒருநாளும் ஓதாதவராய், மற்ச மாமிச மென்ற வகையில் சற்றும் வித்தியாசமின்றிக் குயில் என்றாலென்ன கோழி என்றாலென்ன அணில் என்றாலென்ன ஆடென்றாலென்ன, பன்றியென்றாலென்ன பசுவென்றால் என்ன எதையும் வதைசெய்து உடல் வளர்ச்சிக்கு உணவு உட்கொண்டு எவர்கள் இந்து சமயத்தவர்கள் நாம் என்று சொல்லுகிறார்களோ அவர்களே!

வேதசிவாகமங்களும்புராணங்களும்தேவார திருவாசகங்களும்நீதிநூல்களும்எவையவும் விலக்கவேண்டியன எவை விழைந்து விரும்பிச் செய்ய வேண்டியன எவை என்று சொல்லியிருக்கவும் அந்த நீதிநெறி முறைகளையெல்லாம் விலகுவாருக்கு நல்ல வழிகாட்டி நயம் பெறச் செய்பவர்களே சமயாபிமானிகள். அங்ஙனமின்றி மேடைமீது நின்று அரசியற்கட்சியினர் ஒருவருக்கொருவர் பெருஞ் சண்டையிடுதல் போன்று இந்துக்கள் இந்துசமயத்தை இடையில் இழுத்துவிட்டு நான்தான் இந்துசமயப் பாதுகாவலன் என்று வீண் வீரம் காட்டுவதை அறிஞர்கள் எள்ளி நகையாடுவர்.

இந்து ஆலய பரிபாலனச் சட்டத் திட்டத்தை எதற்காகக் கொணர்ந் திருக்கின்றனர் அரசினர் என்பதையும் அதை ஆதரித்தோர் இந்துக்கள் தம பிரதிநிதிகளாம் பழைமை வாய்ந்த சைவ பரிபாலன சபை விவேகானந்த சபை முதலிய சங்கங்களும் இந்துப் பெரியார்களுமே என்பதையும் உள்நாட்டு மந்திரி உள்ளங்கை நெல்லிக்கனிபோல உரைத்துக் காட்டியிருக்கின்றார். அரசியற்கட்சிகள் என்ற முறையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் இடதுசாரிக் கட்சியும் ஆலய பரிபாலனச் சட்டம் அத்தியாவசியம் என்று அழுத்தம் திருத்தமாகத் தீர்மானஞ் செய்திருக்கின்றனர். புத்தமத ஆலய பரிபாலனச் சட்டத்தைக் கொணர்ந்த நாளில் புத்தமதத்தைத் தாக்குகின்றார் புறநாட்டரசாங்கத்தார் என்று ஆருங் குறை கூறவில்லை. அகில உலகிலும் பலவேறு சமயங்களுக்கும் தரும பரிபாலனச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமயம் என்ற புனிதப் போர்வையிற் பொல்லாப் புலிகள் போன்று தீயன புரிவதையும் புரிபவர்களையும் தடுப்பதற்கும் தண்டிப்பதற்கும் ஆகவே இச்சட்டங்களை உண்டாக்குகின்றனர். இதை ஆர்தான் மறுப்பர் ஆர்தான் வெறுப்பர்.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

உண்ணுவிரதம் என்றால் உடனே காந்தியடிகளைத்தான் உலகம் எண்ணும். அன்னார் விரதம் பூணுர் அரிதம், ஆனல் உண்ணுர் ஒரு பிழைகண்டால். தமது மகத்தான, முன்மாதிரியான வாழ்க்கை முறையால் மகாத்மா என்ற பூரணநாமத்தைப் பெற்ருர். உண்ணுவிரதத்திற்கும் ஒரு தனி மகிமை உண்டாயது.

இப்போது விளையாட்டுப் போட்டியில் ஒன்றாக உண்ணுவிரததையும் அமைத்து அகில உலகங்களிலும் உணவின்றி உயிருடன் வாழும் தத்துவத்தில் அதி உத்தமர் யார் என்ற போட்டி நடைபெறுவது வளர்மதியின் ஒளியில தெரிகிறது.

உண்ணுவிரதப் போட்டிக்காரர் ஆராய்ச்சி முறையிற் கண்டிருக்கும் ஓர் உண்மையுண்டு. எவ்வளவு நாட்களுக்கு உண்ணுதிருக்க வேண்டுமென நினைக்கின்றனரோ அவ்வளவிற்கு ஆயிரக் கணக்கான வெண்ணிலைப் புகையிலைச் சுருட்டை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டியது. பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பர். ஆனல் புகை உவந்திடப் பசியும் பறந்துபோம் என்பர் அவர்.

கஞ்சா முதலிய லாகிரிப் பொருள்களை உபயோகித்து மனத்தை வழிப்படுத்துவது போலன்றி வெள்ளைச் சுருட்டும் உள்ளத்தை ஒருநிலைப் படச்செய்வதை யறிந்து வெள்ளைச்சுருட்டு வியாபாரிகள உண்ணுவிரதிகளுக்கு வெகு சன்மானஞ் செய்யாது விடுவாரா?

## பெரிய புராணப் பெருமை

### ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்க விழாவில் அரிய சொற்பொழிவு

பெரிய புராணம் வெறும் சொற்களாற் றொகுக்கப்பட்டதொன்றல்லவென்றும் அது பேரின்பம் விளைக்கும் சைவசாதனங்களைத் தருகின்ற உண்மை நூல் என்றும் டாக்டர் ம. இராசமாணிக்கம்பிள்ளை அவர்கள் "சேக்கிழார்" என்னும் பொருள்பற்றி ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்க விழாவிற் சொற்பொழிவாற்றும் பொழுது பல எடுத்துக்காட்டுகளால் விளக்கினார். பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள தமது தலைமைக் குறிப்புரையில டாக்டர் இராசமாணிக்கம்பிள்ளை அவர்கள் ஆராய்ச்சி அநுபவம் வாய்ந்த ஆதாரங்களுடன் சரித்திர உண்மைகளைவிளக்கிய சிறப்பைப் பாராட்டிப்பேசினர்.

## வத்தை விபத்து

### பலாயன் இளவரசி மாண்டாள்

மலாயாவில் பிராக்நதிபெருக்கெடுத்தமையால் ஓர் மோட்டார் வத்தை புரண்டுவிட்டதாகவும் அவ்வத்தையிற் பிரயாணஞ் செய்த பதினேழ்மர் இறந்து விட்டதாகக் கருதப்படுகிறதென்றும் அறியக்கிடக்கிறது.

சிலங்கூர் சுல்தானின் பேரப்பிள்ளையான பதின்மூன்று வயது இளவரசியும் இவ்விபத்தில் அகப்பட்டோரில் ஒருவராம்.

## வித்தியாலய மாணவரின் கதிர்காம யாத்திரை

கொழும்பு விவேகானந்த வித்தியாலய மாணவரும் ஆசிரியர்களும் செவ்வாய்க்கிழமை (11-12-51) கதிர்காம தீபாலங்கார விழாவுக்கு யாத்திரை செய்தனர்.

முருககாம தோத்திரங்களுடனும், அரோகரா, வேல் வேல் என்னுங் கோஷங்களுடனும் மாணவர் சென்ற சிறப்பு வியக்கப்படுகின்றது.

## நேருவில் அவதூறு வழக்கு

### ஆதாரமற்றதென நிராகரிக்கப்பட்டது

நேருவுடன் இந்தியப் பொதுத் தேர்தலிற் போட்டியிடுபவர்களில் ஒருவரான இந்து மகாசபையைச் சார்ந்த L. G. தாட்டே என்பவர் வேப்பாவில் நேரு பேசியபொழுது இந்து மகாசபையைப்பற்றியும் தலைவைப்பற்றியும் அவதூறாகச் சொன்னார் என அலகபாத் நீதபதி முன்னர்ச் சமர்ப்பித்த முறைப்பாடு ஒழுங்கானதல்லவென்று தள்ளுபடியாயிற்று.

மகாத்மா காந்தியின் படுகொலையில் இந்து மகாசபைக்காரர் சந்தோஷம பாராட்டினர்கள் என்று நேரு கூறியதாக முறைப்பாட்டுக்காரன சொன்னர்.

## மொழிப் பிணக்கு

### 24 மணித்தியாலத்தில் தீர்ப்பேன்!

— திரு. பண்டாரநாயக

நான் அதிகாரம் பெற்றால எல்லா அரசியற் சிக்கல்களையுந் தீர்ப்பேன. அரசாங்க மொழிப்பிணக்கை 24 மணித்தியாலங்களில் தீர்ப்பேன் என்றுகூற முடியவில்ல தர்மசாலை அமைப்புக்கு அத்திவாரமிட்டபின் அறிவித்துக் கூறுகிறார் திரு. பண்டாரநாயக.

## மணிக்கு 74000 மாத்திரைகள்

மணிக்கு 74000 மாத்திரைகள் தயாரிக்கக்கூடிய பல வேலுவகை இயந்திரங்களை லிவர்ப்பூலிலுள்ள ஒரு தொழில் நிலையம் தயாரித்திருக்கின்றது. எறக்குறைய நூறு வருடங்களுக்கு முன ஆங்கில நிபுணர் ஒருவரால இது கண்டு பிடிக்கப்பட்டது.

## கயரோக மருந்து

### மலிவாக விற்பதற்கு வியாபாரிகள் சம்மதம்

கயரோக நோயாளருக்கு உதவும்பொருட்டு கயரோக மருந்துகள், குறைந்தவிலைக்கு விற்பதற்கு, மருந்து வியாபாரிகள் பலர் சம்மதித்திருக்கிறார்களென அறியவருகிறது.

## புத்தக நன்கொடை

எண்ணுயிரம் பவுண் பெறுமதியான புத்தகங்களைக் கொழும்புத் திட்டத்தின்கீழ் இலங்கைக்கு அவுஸ்திரேலியா கொடுக்கச் சம்மதித்தது. இதன்படி ஒருபகுதி வந்துவிட்டது, மற்றதும் அண்மையில் வரும்.

## அரசாங்க தச்சுத் தொழிற்சாலை

### கூட்டுறவு நிலையமாக்க ஆட்சேபனை

1952-ம் ஆண்டு 31-ந் திகதி சன்னுகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அரசாங்க தச்சுத் தொழிற் சாலையைக் கூட்டுறவுத் தச்சுத்தொழில் நிலையமாக்குதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. வேலையில்லாத திண்டாட்ட மிகுதியை விளைவிக்குமெனத் தொழிலாளர் இதை ஆட்சேபிக்கின்றனர்.

## ஊர்காவற்றுறையில் ஒத்துழையாமை

சங்கக் கூட்டறிக்கை தமிழில் எழுதப்படவேண்டும் என்ற பட்டினசங்கம் தீர்மானித்திருக்கவும் சங்கக்காரியதரிசி ஆங்கிலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கின்ருர்.

இது தொடர்ந்து நிகழுமானல் கூட்டங்களுக்குச் சமுகமளியாது விட அங்கத்தவர்கள் பலர் ஆலோசிக்கின்றனர்.

## தென்னுபிரிக்காவில் ஒத்துழையாமை இயக்கம்

ஆசிய ஆபிரிக்க மக்களுக்கெதிராய் ஐரோப்பியர் செய்யுங் கொடுமைகள் இனித் தாங்க முடியாத படியால் 1952-ம் ஆண்டு சித்திரை 6-ந் திகதி ஆபிரிக்க மக்களும் இந்தியர்களும் ஒன்றுகூடிச் சில அரசாங்கச் சட்டங்களை மீறி நடக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

## சைவப் பிரசங்கம்

நிகழும் கர ௵ கார்த்திகை ௴ 28 ௳ (14-12-51) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் சைவ அன்பர் திரு. ஆ. வே. அருளம்பலம் அவர்கள் "சமயத்தொண்டு" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு காரைநகர்ச் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சிறந்த பிரசங்கஞ் செய்தார்.

பிரசங்கி அவர்கள கொலை, களவு, கள், காமம் முதலிய பாவச் செயல்களை விடுத்து சமய நெறியில் முன்மாதிரியாகச் ஜீவித்து வருவது சமயத்தொண்டு செய்வதற்குப் பெருநன்மை பயக்கும் என்பதை வற்புறுத்திப் பேசினர்.

## நல்ல அரிசி வரவு

கராச்சி (பாகிஸ்தான்) யிலிருந்து 15000 தொன் நல்ல அரிசி அண்மையில் வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## கற்றநாயக்கவில் நூற்கழி ஆக்கம்

கற்றநாயகவில் அமைத்திருக்கும் நெசவுசாலையில் நூல் நூற்கும் ஒழுங்குஞ் செய்யப்பட்டிருக்கிறது. இங்கே நாளொன்றுக்கு 12000 இருத்தல் நூற்கழி ஆக்கப்படுதற்கு இடமுண்டென அறிய வருகிறது.

## உருளைக்கிழங்கு வெங்காயவிலை குறைக்க முயற்சி

இங்குள்ள சில இறக்குமதிக்காரருடைய அருவருக்கத்தக்க முறைகளால் உருளைக்கிழங்கு வெங்காயம் ஆகியவற்றின் விலை உதிகரிக்கிறதென்று இந்த நிலைமையை நீக்குதற்கு எகிப்திய ஏற்றுமதிக்காரரும் இலங்கையின் பெரிய இறக்குமதிக்காரரும் ஒத்துழைக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

இதனால் எதிர்காலத்தில் இவற்றின் விலைகுறையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## இந்து ஆலயச் சட்ட திட்டத்திற்கு மறுப்பு

### நகரமண்டபத்திற் பொதுக் கூட்டம்

சென்ற சனிக்கிழமை மாலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில இந்து ஆலய பரிபாலனச் சட்டத்தை எதிர்க்கும் இந்துக்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. சைவசித்தாந்தப்பெரியார் திரு. சு சிவபாதசுந்தரம்பிள்ளை அக்கிராசனம் வகித்து எதிர்ப்புக்கான பிரேரணைகளை எடுத்துக் கூறினர்.

பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் இந்துசமய விஷயங்களில் அரசாங்கம் எதுவிதத்திலும் தலையிடப்படாது என்றும் அவ்வாறு தலையிட்டால் இந்துக்கள் அனைவரும் அதை எதிர்க்க வேண்டும் என்றும் கூறினர்.

வழக்கறிஞர் திரு. V. S. கார்த்திகேசுவும் வேறு பலரும் சட்டத்தை எதிர்த்துப் பேசினர்.

## உணவுப்புத்தகக் களவு

மன்னார்ப்பிரிவு அதிகாரத்திலுடைய கந்தோரிலிருந்து 1000 உணவுப்புத்தகங்கள் (coupons) களவு போய் விட்டன. பொலீசார் விசாரிக்கின்றனர்.

## இந்து ஆலயச் சட்டத்துக்கு ஆதரவு

### மேற்சபை அங்கத்தவர் திரு. நாகலிங்கம் கொடுக்கிறார்

இந்து ஆலய பரிபாலன சபை அங்கத்தவர்கள் தேர்தல் முறையில் தெரிவு செய்யப்படுதற்கு ஏற்ற ஒழுங்குகள் குறித்த சட்டத்தில வகுக்கப்படாதது தனக்குத் துன்பத்தை விளைவிக்கின்றதென்றும் அப்படியிருந்தும் இது ஓர் முற்போக்கான சட்டமாதலின் அதைத்தான் ஆதரிப்பதாகவும் தனது முதற்பேச்சில் திரு. நாகலிங்கம் குறிப்பிட்டார்.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது. — எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 23—12—51——29—12—51

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

விரும்பினுலென்ன விரும்பாவிட்டாலென்ன. இந்தவாரம் சில மாற்றங்கள் வரும். வியாபாரத்துக்கு நல்லவாரம். ஆனால் பெரும்முதல் விடவேண்டும். செவ்வாய் பிற்பகல், புதன், வியாழன் காலை கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்தவாரம் பெண்பாலாரால் சில தொந்தரவுண்டாகக் கூடும். வாரஇறுதி இரண்டு நாட்களும் கவனமாய்க் கழிக்கவேண்டும். பணநட்டம், களவு, அல்லது வேறு இடையூறுகளுக்கிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்தவாரம் செலவுக்குத்தக்கவரவிலலாமலிருக்கும். வாக்குவாதத் தன்மை ஒழிக்கவேண்டும். குடும்பத்தொந்தரவுக்கும் சிநேகிததிருத்தியீனத்துக்கு மிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4 ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் நல்லமுயற்சிகளுக்கு ஆயத்தஞ் செய்யலாம். சொந்த அலுவலில் எதுவாயினும் பிழை உண்டானாலும் மனந்தளரவேண்டாம். எந்த மாற்றமும் நன்மை யைத் தரும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

இந்தவாரம் விசேஷ காரியம் ஒன்றிலும் அகப்படவேண்டாம். புதுப் பொறுப்புக்களை ஏற்கக் கூடாது இரகசிய விரோதிகளால் தொந்தரவுக்கிட முண்டு. வார இறுதியில், புதுப்பழக்கமுள்ள ஒருவர் அல்லது ஒரு அளவுக்கு அறியாத ஒருவர் வியாபாரத்துறையில் உதவிசெய்யக்கூடும்.

**கன்னிராசி** உத்திரம் 2 3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சொந்த அலுவலுக்கு மிக நல்லவாரம். திரவிய லாபமும், மனச்சாந்தியும் பெண்பாலாரால் உதவியும் வர இடமுண்டு. நோக்கங்களை முன்னேற்றுக.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்.

இந்தாரம் சதியான தொந்தரவுகளுக்கிடமுண்டு. இரகசிய விரோதிகளைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். குடும்பத் தொந்தரவுகளும் மான பங்கமும் வர இடமுண்டு. பெருங் கஷ்டத்திலிருந்து நீங்குவதற்கு சிநேகிதருதவியை எதிர்பார்க்கலாம்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்தவாரம் வியாபார முயற்சிக்கு மிகநல்லது. சிநேகிதர் அதிகம் உதவிப்பண்ணுவர் புதுமுயற்சிகள் விரும்பிய பலனைக் தரும். விரோதிகள் அழிவது நிச்சயம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்தவாரம் செலவுக்குத் தக்க வரவு வராது. குடும்பத் தொந்தரவுக்கிடமுண்டு. இனத்தவர்களிடமிருந்து வரும் சுப செய்திகள் வாரஇறுதியில் செலவை உண்டாக்கக்கூடும்.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் குடும்பத் தொடர்பு தக்கமுறையில் வைத்திருப்பதிற் கஷ்டமுண்டு. உத்தியோகத்துறையில் கெட்டித்தனமாயும் கவனமாயுமிருக்கவேண்டும். வாக்குவாதம் தவிர்ப்பதோடு தேக சுகத்தைப் பற்றியும் விசேஷமாய்க்கண்ணைப் பற்றியும் கவனமாயிருக்கவேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

முதல் நாளில் சிறு சுகவீனத்தைத் தவிர இந்தவாரம் அதிக சந்தோஷமாயிருக்கும். குடும்ப சமாதானமும் இனத்தவர் நன்மைக்குமிடமுண்டு இடமாற்றம் அல்லது வெளியாட்டப் பிரயாணத்துக்கிடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்தவாரத்தின் முதல் மூன்று நாட்களும் கவனமாய்க் கழிக்கவேண்டும். உத்தியோகத் தொந்தரவுக்கும் நண்பர் திருத்தியீனத்துக்குமிடமுண்டு. வார மிகுதி புதுமுயற்சிக்கு நல்லது. குடும்ப சமாதானத்துக்கு மிடமுண்டு.

# விஞ்ஞானியின் கனவே - சித்தாந்தியின் சித்தம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

யைத் தெரிவிக்கிறது. ஆகவே இறை, உயிர் தளை என்பன. மானுட சம்பந்தம் முழுவதும் பதி, பசு, பாசம் என்ற இம் மூன்று சொற்களில் அடங்கி உள்ளது பதி என்பது இறைவன். அவனுடைய தன்மை ஒற்றுமை அல்லது ஒற்றைத்தன்மை. பசு என்பது உயிர்வர்க்கம். அதன் தன்மை கூர்தல் (வளர்ச்சி) ஆகும். கூர்தலே குவிதலையும் கொண்டுள்ளது. பாசம் என்பது உலகம் அல்லது பிரபஞ்சம் ஆகும். அதன் தன்மை எண்ணிக்கையாகும். உயிர் பதிக்கும் பாசத்திற்கும் இடையே அமைந்து நிற்பது. அது எதன் அருகே சார்ந்து இருக்குமோ அதனை ஒத்து இயங்கும். அதன் நோக்கம் கட்டு அல்லது தளைகளை ஒவ்வொன்றாகத் தள்ளிவிட்டு முடிவில் பரம்பொருளாகிய பரசிவத்தில் சேருவது. தனு கரண புவன போகங்கள் (உடல், புலன், புவி, இன்பம்) பசுவின் விடுதலைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது நிடாகம், ஒப்பு, அன்பு என்னும் முறைகளில் அடையப்படும். பதி ஞானம் பசுவின் விடுதலைக்கு மிகவும் இன்றியமையாதது. பதியினுடைய திருவருளின்றி அது கிட்டாது. இதுதான் சைவசித்தாந்தக் கொள்கை.

… … … … … … … … …

சமயத் தத்துவம் அதாவது தமிழர் இவ்விய கலைஞானம் ஆகமங்களில் அடங்கியுள்ளது. அது இறைவன் சடைப்பிடிச் சொல ஆகும். அச் சொல்லிலிருந்து தமிழர் முதலையாகிய சித்தாந்தக் கொள்கை வெளிப்போந்தது.

### வள்ளுவ ஞானம்

நான்மறையின் உபதேசங்கள் வள்ளுவப் பெருந்தகையாரின் அழியாத நூலாகிய திருக்குறளில அடங்கியுள்ளன. தத்துவ ஞானமோ மெய்கண்ட தேவர் தம் ஒப்பற்ற நூலாகிய சிவஞானபோதத்தில் சூத்திரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, வள்ளுவரும் மெய்கண்டாரும் தமிழ் நானமறை, ஆகமம் இவைகளின் சொல்லைகளை எக்காலத்திற்கும் எல்லாருக்குமாகத் தந்திருக்கிறார்கள்.

> **Γ. A. விசுவலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியகட்டுரை.**

தமிழர் சமுதாயத்தின் சிறந்த குணங்களில் ஒன்று சமயசமரசம் ஆகும். அது தாராளமாகச் சேட்டுத் தெரிவது எனலாம, அல்லது அறியும் தன்மையில் சுதந்திர நோக்கம் எனலாம். வள்ளுவர் அருளிச்செய்த நீதிநூலாகிய குறள் அறம் பொருள் இன்பம் என்ற வாழ்க்கைப் பொருள் மூன்றையும், மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம பதி பசு பாசம் என்ற உண்மைப்பொருள் மூன்றையும் உரைப்பதில் அவைகள உலகிற்கே பொது உடைமையாக இருக்கின்றன. அவைகள் உலகிற்கே பொதுவானவைகளாகையால் அவைகள் எலலாக் காலங்களிலும் எல்லாராலும் போற்றத்தக்கவை.

### மேல்நாட்டார் கொள்கை

மேல் நாட்டார்கள் சமயத்தையும் தத்துவஞானத்தையும் இரண்டு வெவ்வேறு இயல்களாக வகுத்து ஆராய்கிறார்கள், ஆனல் சமய போதாசிரியர்களோ பிரிவினை காட்டாது ஒரே தன்மையாக ஆராய்ந்திருக்கிறார்கள். ஆன்மீக உரையும் சமய உண்மையும் வெவ்வேறல்ல என்றும் சமயமும் தத்துவஞானமும் ஒரே கொள்கை கொண்டவை என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

… … … … … … … … …

நுண்ணிய அல்லது ஆன்மீகக் கருத்துக்களையும் அவைகளை வாழ்க்கையில் பயன்படுத்தும் முறைகளையும் அவனவன் பேசும் மொழியில் தான் பக்குவமாக உரைக்க முடியும். எவன் எந்த மொழியில பிறந்து பேசுகிறானோ அந்த மொழியிலேதான் அவனுடைய உள்ளத்தெழும் உணர்ச்சிகளையும் நுண்ணிய கருத்துக்களையும் ஆசாபாசங்களையும் நன்கு உணர்த்த முடியும்.

### தமிழ்மொழி வளர்ச்சி

தமிழ் மக்கள் தங்கள் பண்டை நிலைக்கு ஏற்றவாறு தாம் வழங்கும் மொழியையும் வளர்த்திருக்கிறார்கள். சிறந்த அகராதி யாசிரியர் சங்கைக்குரிய பெர்சிவல் என்பவர் தமிழைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்: "வேறெந்த மொழியும் இது கொண்டிருக்கும் அத்தனை ஆற்றலோடு சுருக்கச் சொல்லுதலையும் கொண்டிலது. நெஞ்சில் உள்ளதை வெளியிடும் தன்மையில் உண்மை அறிவு இம் மொழியைப்போல வேறெந்த மானுட மொழியிலும் இல்லை ……… இம் மொழி மனதிற்குத்தக்கவாறு எளிதில் விளக்கி வைத்துக் கடினமான தத்துவ ஞானத்தையும் எளிய சொற்களில் தெளிவுபடுத்தும் இயல்புகொண்டது" என்கிறார்.

மனிதனுல் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் விரிந்ததும் பண்புடையதும் ஒளிதிகழ்ந்ததும் ஆனது தமிழ்மொழி ஆகும். எல்லா

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## தனி உரிமைப் பாடசாலை ஆசிரியர்கள்

அரசாங்க இலவசக் கல்வித் திட்டத்திற் சேராத தனிஉரிமைப் (Private Management) பாடசாலை ஆசிரியர்களுடைய சேவை நிலைமை, நிபந்தனைகளைப்பற்றி அரசாங்கம் சட்டம் வகுக்கமாட்டாதென அறிய வருகிறது.

## ஆயுள்வேத வைத்தியருக்குநன்கொடை

ஆற்றல் சிறந்த ஆயுள்வேத வைத்தியர்களுக்குநன்கொடை கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்கின்றது. இதனால் ஆயுள்வேத அறிவைப் பெருக்கி மக்கள் நலனுக்கு உபயோகப்படுத்தலாமென்று கருதப்படுகின்றது.

## பாடசாலைச் சம்பளம்

இலவசக் கல்வித்திட்டத்தின்கீழ் மாணவர் கொடுக்கவேண்டியிருக்கும் சம்பளம் பெற்றருடைய வருவாய்க்கு ஏற்றதாக ஒழுங்கு செய்யும் ஓர் சுற்றுநிருபத்தைக் கல்வி மந்திரி வெளியிடுவார். இதற்கு முன்னிருந்த குறைகளை இது நீக்கும்.

## தமிழாசிரியர் மதிப்பு

### ஆசிரியர்களே குறைக்கின்றனர்

சென்றசனிக்கிழமை (15 12-51) வடமேற்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் ஒன்று சிலாபம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பிக்கப்பெற்றது. அத்தருணம் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக்காரியதரிசி திரு. G. G. N. நல்லராசா பேசுகையில் தமிழாசிரியர்களுக்கு மதிப்புக்குறைந்திருப்பதற்கு ஆசிரியர்களாகிய தாங்களே காரணர் என்று கூறி இந்நிலைமை நீக்குதற்கு யாவரும் ஒற்றுமையாய் உழைக்கவேண்டுமென்று வற்புறுத்தினர்.

## பண்ணைப் போக்குவரத்து

பண்ணைத் துறைமுகத்தில் போக்குவரத்துக்கு உபயோகித்த இயந்திரப்பாதை பழுதுபட்டிருப்பதால் பிரயாணிகளுக்கு வசதியீனம் ஏற்பட்டிருக்கின்றது. குறித்த பாதை விரைவிற்றிருத்தப்படுமாம்.

## தலைமைக்காரருக்குப் பிரதிவாதச்சபை

### தலைமைக்காரர் சங்கம் அமைக்கின்றது

தலைமைக்காரர் நலன் பாதுகாக்கப்படும்பொருட்டு ஓர் பிரதிவாதச் சபையை அரசாங்க ஆதரவுடன் தலைமைக்காரர் சங்கம் நிறுவுகின்றது.

கல்வியும் திறமையும் வாய்ந்த தலைமைக்காரரே இச்சபையின் அங்கத்தவராவர். மேற்படி சங்கச்செலவில் இவர்களுக்குச் சட்ட அறிவு கொடுக்கப்படும்.


## தேவை

கந்தர்மடம் திருநெல்வேலி ஐக்கிய பண்டகசாலைச் சங்கப் புடவைக்கடைக்கு மானேஜர் தேவை சம்பளம் மாசம் 50 ஐம்பது ரூபா ரொக்கப்பிணை 250 இருநூற்றைம்பது ரூபா. விரும்பினோர் தமது தகைமைகளைக் குறித்து 31-12-51 க்கு முன் மனுச்செய்க. ஏனையவிபரங்களை நேரிலறிக.

வே. இராசரத்தினம்
கௌரவ காரியதரிசி
கந்தர்மடம்—திருநெல்வேலி
ஐ.ப சாலைச் சங்கம்

15 12 51.

M 154 18—21—12

# விஞ்ஞானியின் கனவே சித்தாந்தியின் சித்தம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வற்றிலும் மிகப் பழையது அல்லது பண்டையவைகளில் ஒன்று ஆகவும் உள்ளது. அது இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டது. பேசும் கருவியாகிய மிடற்றிலிருந்து இயற்கையாகத் தோன்றும் ஒலிகளைக்கொண்டது. அவ்வொலியின் உணர்ச்சி, விருப்பு வெறுப்பு முதலிடவைகளை இயற்கையாகக்காட்டக்கூடியவை அதன் எழுத்துக்களும் இயற்கை ஒலி வளர்ச்சிகளைத் தோற்றுவிக்க கூடியவை. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வோர் இரகசியத்தைக் காட்டுவது ஆகும். வேறெந்தமொழியின் எழுத்துக்களும் இந்தத் தத்துவத்தைக் கொண்டிலது.

## தமிழகத் தொன்மை

மிகக் குறைந்த அளவைக் கொண்டு கூறினாலும் தமிழகத்து இலக்கிய வரலாறு 2500-ஆண்டுகளுக்குக் குறையாமல் எட்டியிருக்கிறது. வேறெந்த மொழியிலும் தமிழைப்போல அத்தனைச் சிறந்ததும் பண்டை நிலையும் கொண்ட இலக்கியம் இல்லை. மக்கள் சமுதாயத்திலேயே மிகவும் பண்டைய இனத்தார் ஆகிய தமிழர் மிகச் சிறந்த மொழி சமயம் ஞானம் இவைகளை வளர்த்து இருப்பது இயல்பே அவைகளை வளர்த்து விருப்பதில் அவர்களுடைய எண்ணங்கள் வாழ்க்கைப் போக்கு இவைகளை உயிர் இறைவனோடு உடன் உறையத்தக்க நிலை பொருந்தவும் உள்ளும் புறம்பும் பரம ஒளியைப் பரப்பவும் சிவத்துவம் அலலது வீடுபேற்றினை அடையவும் கூர்தல் கொண்டுள்ளது. ஏனெனில் தமிழில் இறைவனுக்குக் கடவுள் என்றபெயர் உண்டு அல்லவா? கடவுள் என்றால் புறம்பும் உள்ளும் உள்ளது, அதாவது வெளிக்கு வெளியும் உள்ளுக்கு உள்ளும் அமைந்தது என்பதாகும். இப்பண்டை மக்களின் கருத்தில் கடவுள் உருவமற்றவர், ஆனந்தமயமானவர், எங்கும் உள்ளவர் என்பதாய். ஆகவே அவர்கள் கடவுளின் உண்மை இயல்பை ஆறந்து கொண்டவர்கள் என்க,

……………………

## உலகாயதத்துக்கு மருந்து

தற்காலத்தில் பௌதீக லோகாயதத்திற்கு ஏற்ற மருந்து சித்தாந்த உணர்வேதான். நாம் திடமான நம்பிக்கையை இழந்து இருந்தால், நமது இலட்சியத்தை இழந்திருந்தால், நமது சமயத்தை இழந்திருந்தால், அதற்குக் காரணம் குறிக்கோள் திட்டமும் நம்பிக்கை கொண்டிருக்கவல்ல ஆதாரமும் இல்லாமையேயாம். நாமோ சித்தாந்த உணர்வை இழந்தோம். கட்டுப்பாடில்லாத பிதற்றதலுக்கும் தற்கால ஆசாபாசங்களின் அகோரசீகத்திறனும் இடம் கொடுத்து ஆன்மீக அமைதியைக் கலைத்துவிட்டோம். ''இவ்வுலகில் பிறந்ததன் பயன் இறைபணி நிற்றலே.' கேர்மையில் நோக்கம் கொண்டு விருப்பு வெறுப்புக்களால் தாக்கப்படாது, அழகையும் மேம்பாட்டையுமே அறிதலும், கிடைக்கப் பெறுத கொடையாகும்; எவராலும் முழுமையும் சொன்னப்பெறுததாகும். ஆனால் மனிதனுடைய ஆராய்ச்சியின் இடையிலும் மனோராச்சியத்தின் சூழலின் இடையிலும் அவனை ஆணையிட்டு நிலை நிறுத்தும் ஒரு சிறந்த விதி ஒன்று இருக்கிறது. அதுதான் அவனைக் காலா காலங்களில் இயற்கையில் மீண்டும் நிலை நிறுத்துவதும் சித்தாந்த உண்மையில் அவனை மீண்டும் புகுத்துவதும் ஆகும்.

தற்கால வாழ்க்கையின் உலகியப் பகுதியே மனிதனுடைய நெஞ்சைக் கவர்ந்திருக்கிறது. நாடோறும் நாம் வாழும் வாழ்க்கையோ உலகிய உணர்ச்சி, உலகிய செல்வாக்கு, விஞ்ஞானக் கலை கொண்டு புதிய கருவிகளின் உற்பத்தி, அவைகளைக்கொண்டு வாழ்க்கையை வாணிபமாக்குவதில் பெருமுயற்சி இவைகளால் பரிபாலிக்கப் படுகிறது. நாம் உண்மையை ஆராய்வதில் சித்தாந்த உணர்ச்சிக்கும் ஒழுக்க முறைகளுக்கும் மீண்டும் செல்ல வேண்டும்.

## ஆத்ம லாபம்

உலகியமென்னும் சிறைக்கோட்டத்திலிருந்து வெளியே நோக்கவும் எங்கிருந்து ஆன்மா வாழ்வு பெற்றதோ அந்த இடமாகிய வீட்டு நெறியை (பரமபதம்)க் காணவும் நமக்கு உதவிவருவது சித்தாந்தத்தினால்தான். விஞ்ஞானி நினைக்கும் ஒப்பற்ற ஒற்றுமை சித்தாந்தத்தில்தான் உண்டு. பரமசிவத்தின் எட்டுச்சக்திதான் விஞ்ஞானி கனவு காணும் மேல் நிலை ஆற்றல் ஆகும் பரமாணுக்கள் ( Electrons ) கொண்டிருக்கும் இடைவிடாத அசைவுதான் சிவபெருமானின் பேரின்பக்கூத்து(ஆனந்தநடனம்). விஞ்ஞானி சொல்வதோ மனிதனுடைய மனோ தத்துவத்தினால் அறியக்கூடாதவை. அந்த உண்மைகள் என்பது, சித்தாந்தம் கூறுவதோ இறைவனுடைய அருளினால் அவைகளை அறிய முடியும் என்பதே. உலகக்கட்டு என்னும் பாசத்திலிருந்து விடுதலைபெற்ற மனிதனுடைய ஆன்மீகப் பேற்றிற்கு எவன் செல்லுகிறானோ அவனுக்கு இறைவன் காட்சிதருவான். சத்தியமாய் சர்வ வியாபகமாய் நின்று ஆடும் ஆனந்தக்கூத்தில், பிரபஞ்சத்தில் நடுநாயகமாகிய மானிட இதயச் சிதாகாசமாகிய சிதம்பரப் பேரின்பமன்றுள், அவனுடைய திவ்விய ஞானம் எல்லாவற்றையும் தழுவிக்கொண்டு எல்லாரிடத்தும் ஆனந்த மயத்தைப் பொழிந்து கொண்டிருக்கும். விஞ்ஞானியும் உடம்பு நிலையா இடத்தில மனதி செலுமம என்று ஒத்துக்கொள்கிறான். நமது அடியார்களோ இதனை முன்னமே அறிந்து தங்கள் மனோதத்துவத்தின் ஒப்பற்ற ஒரு பொருளை உணர்ந்திருந்தார்கள். அண்டங்கள், புவனங்கள், உலகங்கள் முதலியன அவைகளைக் காணுபவர்களால் காணப்படுபவை. விஞ்ஞானி அறிவுபெறவேண்டி உருக்குத் தொன்னைகளிலும் தூரக் கண்ணாடிகளிலும் தேடிக்கொண்டிருக்கிறான். சித்தாந்தமோ தற்கால மனிதன் கண்டுபிடித்த முடிவுகளையெல்லாம் முன்னமே கண்டு கொண்டு ஒழுங்காகவும் சரியானதுமான இயற்கைக் கலை ஞானத்தை விரித்திருக்கிறது. ஆகவே, சித்தாந்தம் எல்லா அறிவையும் தன்னுள் அடக்கிக்கொண்டு உண்மையான முடிவாக விளங்குகிறது என்க.

— தமிழாக்கம் கோவைகிழார்


திறமான
**தேக்க மரங்கள்**
பல தினிசுகளிலும்

திறமான
**ஞனிமார்க்ஓடுகள்**
13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. ( எஸ். எஸ். ஸீ. ) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25 ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்) டை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25 ச

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ 1 00

சைவ சமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தகுதி. முதலி வெளிவராதது. விலை 60 சதம் (அஞ்சல் 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna.


புற்றளைச் சாரதாபீட வித்தியாசாலை அல்லது றொத்துப்பளை கலவன்பாடசாலை தர்மகர்த்தாக்கள் சபையின் 18-11-50 தொடக்கம் 13-12-51 வரையுமுள்ள

### வரவு செலவுக் கணக்கு

| | வரவு. | செலவு. |
|---|---|---|
| பாடசாலை வெள்ளையடிப்பும் | ரூ. ச. | ரூ. ச. |
| கட்டிடத் திருத்தங்களும் | | 182 20 |
| தர்மகர்த்தாக்கள் சபைக்குக்கொப்பிப்புஸ்தகங்கள் | | 5 — |
| அச்சுக்கூலி | | 13 — |
| பாடசாலைப்பாவிப்புக்கு வெள்ளைக்கட்டியும் | | |
| கொப்பி புஸ்தகமும் | | 14 — |
| பாடசாலை கூட்டித்துப் பரவசெய்தவகைக்கு | | 11 — |
| பாடசாலை வேய்தலுக்கு கிடுகும் வேச்சலுக்கு | | |
| கூலிவகையும் | | 215 32 |
| வேலி அடைப்பும் கூலிவகையும் | | 92 73 |
| தென்னைமரம் தறிப்பதற்கு கஷ்டங்கொடுத்தவகை | | 100 — |
| கிணற்றுச்செலவுவகை | | 499 95 |
| பிள்ளைகளுக்குக் குடிக்கத் தண்ணீர் அள்ளிவைத்தகூலி | | 120 — |
| கரகூச வரி | | 33 — |
| மகாசபைத் தனாதிகாரியிடம் | 1371 93 | |
| கையிருப்புப் பணம் | | 85 78 |
| | 1371 93 | 1371 93 |

க. சேனாதிராசா
மேற்படி சபையின் கௌரவ காரியதரிசி—
தனாதிகாரி

சரியென அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
சு. பொ. கந்தையா F. I. S. A. (Lond.)
பகிரங்கக் கணக்குப் பரிசோதகர்.
15—12—51.

M. 156 18. 21—12—51.


# யாழ்ப்பாணம ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப் பெரிய
—நகை—
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, December 21, 1951.